மோட்டார் வாகன விபத்து கோருரிமை தீர்ப்பாயம், திருவாரூர்
(தலைமை நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருவாரூர்)

முன்னிலை : திருமதி.Dr.R. லதா, M.A., M.L., Ph.D.,
தலைமை நீதித்துறை நடுவர், திருவாரூர்

2026 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 04 ஆம் நாள் செவ்வாய்க் கிழமை
திருவள்ளுவராண்டு 2055 ஸ்ரீ பராபவ வருடம் ஆடித் திங்கள் 18–ம் நாள்

மோ.வா.வி.இ.கோ.மனு எண்.44/2025

இளவர். ராகினி, (வயது–14/25)
த/பெ. மனோகரன்,
க.எண்.420,
பூங்காவூர் மெயின்ரோடு,
குருங்குளம் அஞ்சல்,
நன்னிலம் தாலுகா,
திருவாரூர் மாவட்டம்.

இளவர். ராகினி என்பவருக்கு அவரது தாயார் உமாராணி என்பவரின் மூலமாக

. . . **மனுதாரர்**

/எதிர்/

1) தனலெட்சுமி பஸ் சர்வீஸ் உரிமையாளர்,
33, கைலாசநாதர் கோவில் தெரு,
காரைக்கால்,
புதுச்சேரி

2) ராமலிங்கம்,
த/பெ. சுப்பிரமணியன்,
வடக்குத்தெரு,
கிடாதலைமேடு, காளி

LATHA Digitally signed by LATHA Date: 2026.08.04 13:07:01 +0530

மயிலாடுதுறை.

3) மேலாளர்,

நியூ இந்தியா இன்சூரன்ஸ் கோ லிட்,

முதல் தளம், MAJ அபார்மெண்ட்,

149, பாரதியார் சாலை,

காரைக்கால்

புதுச்சேரி மாநிலம்.

. . . எதிர்மனுதாரர்கள்

மாண்பமை சென்னை உயர்நீதிமன்றம் Tr.CMP.No.264 முதல் 281/2020 மனுக்களில்11/05/2020 தேதியில் பிறப்பித்த தீர்ப்பின் வழிகாட்டுதலின் அடிப்படையில் கொடுக்கப்படும் படிவமும் பிறப்பிக்கப்படும் உத்தரவும்

(a)	**இழப்பீடு கோருபவரின் பெயர் மற்றும் முகவரி:**		இளவர். ராகினி, (வயது–14/25) த/பெ. மனோகரன், க.எண்.420, பூங்காவூர் மெயின்ரோடு, குருங்குளம் அஞ்சல், நன்னிலம் தாலுகா, திருவாரூர் மாவட்டம்.
(b)	**எதிர்மனுதார்களின் பெயர் மற்றும் முகவரி**		1) தனலெட்சுமி பஸ் சர்வீஸ் உரிமையாளர், 33, கைலாசநாதர் கோவில் தெரு, காரைக்கால், புதுச்சேரி 2) ராமலிங்கம், த/பெ. சுப்பிரமணியன், வடக்குத்தெரு, கிடாதலைமேடு, காளி மயிலாடுதுறை. 3) மேலாளர்,

LATHA Digitally signed by LATHA Date: 2026.08.04 13:07:06 +0530

			நியூ இந்தியா இன்சூரன்ஸ் கோ லிட், முதல் தளம், MAJ அபார்மெண்ட், 149, பாரதியார் சாலை, காரைக்கால் புதுச்சேரி மாநிலம்.	
(c)	**இழப்பீடு கோரிக்கை மனு தாக்கல் செய்த தேதி**	**–**	02.08.2025	
(d)	**உத்தரவு பிறப்பிக்கப்பட்ட தேதி**	**–**	04.08.2025	
(e)	**பிறப்பிக்கப்பட்ட இழப்பீட்டு தொகை விபரம்**	**–**	ரூ.	
(f)	**வட்டி விகிதம்**	**–**	7.5%	
(g)	**எந்த தேதியிலிருந்து வட்டி தொகை செலுத்தப்பட வேண்டும்**	**–**	02.08.2025	
			1) மனு/வழக்குரை நீ.ம.க	552.50/–
			2) வக்காலத்து	10/–
			3) படி மெமோ	13.50/–
			4) வழக்கறிஞர் கட்டணம்	5,360/–
			மொத்தம்	5,936/–
i)	**உத்தரவின்படி இழப்பீட்டு தொகை, வட்டி மற்றும் செலவுத்தொகையை யார் செலுத்த வேண்டும் என்பது சம்பந்தமான விபரம்**		இழப்பீட்டு தொகை ரூ.1,18,000/–ஐ 3–ம் எதிர்மனுதாரர்/காப்பீட்டு நிறுவனம் வட்டி மற்றும் செலவுத் தொகையுடன் வைப்பீடு செய்ய வேண்டும்.	
(j)	**மனுவில் பல கோரிக்கையாளர்கள் இருக்கும் பட்சத்தில் ஒவ்வொரு கோருரிமையாளருக்கும் இழப்பீட்டு தொகையில் கிடைக்கத்தக்க பாக விபரம்**	**–**	இல்லை	
(k)	**இழப்பீட்டு தொகை எதன் மூலமாக எந்த வகையில் செலுத்தப்பட வேண்டும் என்பது சம்பந்தமான விபரம்**		இழப்பீட்டுத் தொகை ரூ.1,18,000/–ஐ மனுதாரருக்கு, 3–ம் எதிர்மனுதாரர் இந்த மனு தாக்கலான தேதியிலிருந்து முழு தொகை வசூலாகும் வரைக்கும் 7.5% வட்டியுடன்	

LATHA Digitally signed by LATHA Date: 2026.08.04 13:07:11 +0530

			(மனு தரப்பினரின் தள்ளுபடி செய்யப்பட்ட காலம் இருப்பின் அதை தவிர்த்து) செலவுத்தொகையுடன் இவ்வுத்தரவு பிறப்பிக்கப்பட்ட ஒரு மாத காலத்திற்குள் இத்தீர்ப்பாயத்தின் வங்கிக் கணக்கு எண்ணான ஸ்டேட் பேங்க ஆப் இந்தியா, விளமல் கிளை, திருவாரூர் கணக்கு எண்.CJMTVR442025NIIC, IFSC. SBIN0004266 – இ மாறுதல் மூலம் வைப்பீடு செய்து நீதிமன்ற Email ID. tvr.cjm–tn@indiancourts.nic.in என்ற மின்னஞ்சல் முகவரிக்கு தகவல் தெரிவிக்கவேண்டும்
(l)	**இழப்பீட்டு தொகை கோருரிமையாளர் எவ்வாறு பெற்றுக் கொள்வது என்பது சம்பந்தமாக பிறப்பிக்கப்பட்ட உத்தரவு விபரம்**		3–ஆம் எதிர்மனுதாரர்/காப்பீட்டு நிறுவனம் தீர்ப்பாணை தொகையை வைப்பீடு செய்யப்படும் பட்சத்தில், மனுதாரர் மனுதாக்கல் செய்வதன் மூலம் மனுதாரர்களது வங்கி கணக்கில் பெற்றுக் கொள்ளலாம்
(m)	**எந்த குறிப்பிட்ட காலத்திற்கு இழப்பீட்டு தொகைக்கான வட்டி கோருரிமையாளருக்கு கிடைக்கத்தக்க தல்ல என்ற விபரம் ஏதேனும் இருப்பின்**	–	இல்லை.
(o)	**இதுவரை செலுத்தப்பட்ட நீதிமன்ற கட்டணம்**	–	ரூ.585.50/–
(p)	**உத்தரவு பிறப்பிக்கப்பட்ட தேதியிலிருந்து 10 நாட்களுக்குள் செலுத்தப்பட வேண்டிய மீதி நீதிமன்ற கட்டணம்**	–	இல்லை
(q)	**திருப்பி வழங்கத்தக்க கூடுதல் நீதிமன்ற கட்டணம்**	–	இல்லை.

இம்மனு கடந்த 02.08.2025 ஆம் தேதியன்று திருவாரூர் மாவட்ட அமர்வு நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டு 04.09.2025 அன்று M.C.O.P.No.70/2025 என்ற எண்ணில் திருவாரூர் மாவட்ட அமர்வு நீதிமன்றத்தால் கோப்பிற்கு எடுக்கப்பட்டு உ.வி.மு.ச.பிரிவு 24ன்கீழ் இந்நீதிமன்றத்திற்கு பரிந்துரைக்கப்பட்டுள்ளது. பின்னர் 05.08.2025 அன்று இந்நீதிமன்றத்தால் M.C.O.P.No.44/2025 ஆக கோப்பிற்கு எடுக்கப்பட்டுள்ளது. இம்மனுவானது 27.07.2026 ஆம்

LATHA Digitally signed by LATHA Date: 2026.08.04 13:07:16 +0530

தேதியன்று என் முன்பு இறுதி விசாரணைக்கு வந்தபோது மனுதாரர் தரப்பில் வழக்குரைஞர் திரு.C. சதாசிவம், அவர்கள் முன்னிலையாகியும், 1 ஆம் எதிர்மனுதாரர் தரப்பில் வழக்குரைஞர் திரு. எஸ். கார்த்திகேயன் அவர்கள் முன்னிலையாகியும், 2 ஆம் எதிர்மனுதாரர் தரப்பில் தோன்றாதரப்பினராக்கப்பட்டும், 3 ஆம் எதிர்மனுதாரர் தரப்பில் வழக்குரைஞர் திரு.T.P.S. மணிகண்ணன், அவர்கள் முன்னிலையாகியும், இருதரப்பு வாதம் கேட்கப்பட்டு விசாரணை செய்யப்பட்டுள்ள சாட்சி மற்றும் சான்றாவணங்களை பரிசீலனை செய்ததன் அடிப்படையில் இத்தீர்ப்பாயம் வழங்கும்...

ஆணையுரை

இம்மனுவானது மோட்டார் வாகன சட்டப்பிரிவு 140, 141, 142 மற்றும் 166 இன் கீழ் கடந்த 30.06.2022 தேதியன்று மனுதாரர் வாகன விபத்தில் காயமடைந்ததற்கு ரூ.50,00,000/- இழப்பீட்டு தொகையை 7.5 % ஆண்டு வட்டியுடன் எதிர்மனுதாரர்கள் கொடுக்க உத்தரவிடக்கோரி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2) **மனு உரை சுருக்கம்.**

(i) இளவர் மனுதாரர் கடந்த 30.06.2022 அன்று மாலை பள்ளி முடித்துவிட்டு வீட்டிற்கு திரும்பிய போது பூங்காவூர் மெயின்ரோட்டில் அப்துல்ரத்தீப் என்பவரின் கூரை கொட்டகையின் எதிரே சாலையின் இடது ஓரமாக நின்று கொண்டிருந்தபோது மாலை சுமார் 05.30 மணியளவில் மேற்கிலிருந்து கிழக்கு நோக்கி சென்ற PY 02 B 9939 என்ற பதிவெண் கொண்ட 1 ஆம் எதிர்மனுதாரரின் தனியார் பேருந்தை அதன் ஓட்டுநரான 2 ஆம் எதிர்மனுதாரர் ஹாரன் அடிக்காமலும், அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் ஓட்டி வந்து மனுதாரரின் மீது மோதி விபத்தை ஏற்படுத்தியதில் மனுதாரரின் மீது மோதியதில், மனுதாரருக்கு இடது கண்புருவரம், இடது கழுத்து, இடது கன்னம் ஆகிய இடங்களில் காயம் ஏற்பட்டுள்ளது. காயம் அடைந்த அவரை முதலில் நன்னிலம் ஆரம்ப சிகிச்சை பெற்று பின்னர்

LATHA Digitally signed by LATHA Date: 2026.08.04 13:07:22 +0530

திருவாரூர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்துள்ளார்.

(ii) இந்த விபத்திற்கு 1–ம் எதிர்மனுதாரரின் வாகனத்தை இயக்கிய 2 ஆம் எதிர்மனுதாரரின் அதிவேகமும், அஜாக்கிரதையும், கவனக்குறைவுமே காரணம் என்பதால் பேரளம் தாலுக்கா காவல்நிலையத்தில் குற்ற எண்.332/2022, இ.த.ச பிரிவுகள் 279, 337–ன் கீழ் வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது.

(iii) மனுதாரர் விபத்தின் போது பள்ளியில் படித்து வந்துள்ளார். மனுதாரருக்கு பார்வை திறன் குறைந்துவிட்டதாகவும், தொடர்ந்து படிக்க இயலாமல் போய் உள்ளது. மனுதாரருக்கு கண்பார்வை குன்றியதால் புத்தகத்தை பார்த்து படிக்க இயலாததால் பாடத்தை கவனிக்க முடியாமலும், நல்ல மதிப்பெண் எடுத்து தகுதியான பாடக்குருப்பில் சேர்ந்து படிக்க இயலாத நிலை உள்ளது. இளைய வயதுடைய மனுதாரருக்கு முக்கிய புலனான கண்ணில் பாதிப்பு ஏற்பட்டு பெரும் ஈடு செய்யமுடியாத கஷ்டம் ஏற்பட்டுள்ளது.

(iv) விபத்தை ஏற்படுத்திய வாகனம் 1 ஆம் எதிர்மனுதாரருக்கு சொந்தமானது என்றும், அந்த வாகனம் 3 ஆம் எதிர்மனுதாரரின் காப்பீட்டு நிறுவனத்தில் காப்பீடு செய்யப்பட்டுள்ளது என்றும், ஆகவே, மனுதாரருக்கு காயத்திற்கும், அதன் பின்விளைவார் மனுதாரருக்கு ஏற்பட்ட பாதிப்பிற்கும் இழப்பீடாக ரூ.50,00,000/–ஐ எதிர்மனுதாரர்கள் கொடுக்க உத்தரவிடுமாறு இம்மனுவுரையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

3) <u>1–ம் எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிருரையின் சுருக்கம்</u>

LATHA Digitally signed by LATHA Date: 2026.08.04 13:07:27 +0530

3.1) இந்த மனுவானது சட்டப்படியும், சங்கதிகளின்படியும் நிலைக்கத்தக்கது அல்ல. இந்த எதிர்மனுதாரரால் ஒப்புக்கொள்ளப்படும் சங்கதிகளை தவிர மற்றவைகளை மனுதாரரே நிரூபிக்கவேண்டும்.

3.2) மனுவில் கூறப்பட்டுள்ள விபத்து நடைபெற்றதாக கூறப்படுவது முற்றிலும் பொய்யானது. பதிவு எண் PY 02 B 9339 கொண்ட பேருந்தின் ஓட்டுநர் வாகனத்தை கவனக்குறைவாகவோ அல்லது அஜாக்கிரதையாகவோ இயக்கவில்லை. மாறாக, போக்குவரத்து விதிகளை முறையாகப் பின்பற்றி பேருந்தை இயக்கி வந்துள்ளார்.

3.3) மனுதாரர் கூறியிருப்பது போல், அவர் இப்பேருந்தால் மோதப்படவில்லை. பொய்யான இழப்பீடு பெறும் நோக்கத்திலேயே மனுதாரர் இவ்வழக்கைத் தாக்கல் செய்துள்ளார். எதிர்மனுதாரரின் வாகனத்திற்கு கூறப்படும் விபத்துடன் எவ்விதத் தொடர்பும் இல்லை.

3.4) மனுதாரர் சாலையோரத்தில் நின்று கொண்டிருந்தபோது பேருந்து மோதியதாக கூறியிருப்பது முற்றிலும் பொய்யானது எதிர்மனுதாரரோ அல்லது வாகன ஓட்டுநரோ எந்தவித சட்டப்பூர்வப் பொறுப்பும் ஏற்க வேண்டியதில்லை.

3.5) ஏதேனும் காரணத்தினால் மனுதாரருக்கு இழப்பீடு வழங்கப்பட வேண்டும் என்று இம்மாண்புமிகு நீதிமன்றம் கருதினால், அதற்கான பொறுப்பு 3–ஆம் எதிர்மனுதாரர் மீதே சுமத்தப்பட வேண்டும். ஏனெனில், 1–ம் எதிர்மனுதாரரின் வாகனம் 3–ஆம் எதிர்மனுதாரரிடம் செல்லுபடியாக காப்பீடு செய்யப்பட்டிருந்தது.

3.6) எனவே, மனுதாரரின் மனுவில் எவ்வித தகுதியும் இல்லாத காரணத்தால், இம்மனுவை இந்த எதிர்மனுதாரரின் செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்து உத்தரவிடக்கோரி இந்த எதிருரையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

4) 3–ம் <u>எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள</u>

LATHA Digitally signed by LATHA Date: 2026.08.04 13:07:31 +0530

எதிருரையின் சுருக்கம்

4.1) மனுவில் குறிப்பாக ஒப்புக்கொள்ளப்பட்டுள்ள சங்கதிகளைத் தவிர, மனுதாரர் முன்வைத்துள்ள அனைத்து குற்றச்சாட்டுகளும் முற்றிலும் மறுக்கப்படுகிறது.

4.2) விபத்தில் தொடர்புடைய PY 02 B 9339 பதிவு எண் கொண்ட தனியார் பயணிகள் பேருந்தின் உரிமையாளரான முதல் எதிர்மனுதாரரிடமிருந்து இதுவரை இவ்வெதிர்மனுதாரருக்கு எந்தவித இழப்பீட்டு கோரிக்கைப் படிவமோ, வாகன ஆவணங்களோ பெறப்படவில்லை.

4.3) மனுதாரர் தரப்பில் இந்த எதிர்மனுதாரரை வாகன காப்பீட்டாளராக சேர்த்ததற்கான காப்பீட்டு பாலிசி விவரங்களையோ அல்லது அதுகுறித்த தகவல்களின் ஆதாரங்களையோ மனுதாரர் தரப்பில் குறிப்பிடவில்லை. மேலும், விபத்தில் தொடர்புடைய வாகனத்திற்கு செல்லுபடியாகும் காப்பீடு இருந்து வந்துள்ளது என்பதை மனுதாரரே நிரூபிக்க கடமைப்பட்டவர் ஆவார். அந்தவகையில், மனுதாரர் காப்பீடு பாலிசி குறித்த விவரங்களை முறையாக வழங்காததால் விபத்திற்குட்பட்ட வாகனத்திற்கு செல்லுபடியாகும் காப்பீடு பாலிசி இருந்து வந்துள்ளது என்பது இந்த எதிர்மனுதாரரால் மறுக்கப்படுகிறது.

4.4) மேலும், வாகன ஓட்டுநருக்கு செல்லுபடியாகும் ஓட்டுநர் உரிமம் இருந்து வந்துள்ளது என்பதும் இந்த எதிர்மனுதாரரால் மறுக்கப்படுகிறது. விபத்திற்குட்பட்ட வாகனம் இந்த எதிர்மனுதாரர் நிறுவனத்தில் காப்பீடு செய்யப்பட்டிருப்பினும் வாகன ஓட்டுநருக்கு செல்லத்தக்க உரிமம் விபத்து சமயம் இருந்தால் மட்டுமே இந்த எதிர்மனுதாரர் மனுதாரருக்கு இழப்பீடு கொடுக்க கடமைப்பட்டவர். மேற்படி விபத்தானது 1ம் எதிர்மனுதாரர் வாகன ஓட்டுநரின் கவனக்குறைவு மற்றும் அஜாக்கிரதையால் ஏற்பட்டது என்பதை மனுதாரர் நிரூபிக்க வேண்டும்.

LATHA Digitally signed by LATHA Date: 2026.08.04 13:07:36 +0530

4.5) மனுதாரர் கோரியுள்ள இழப்பீட்டு தொகை மற்றும் அதன் வட்டி தொகை மிக அதிகம். மேற்படி விபத்தின் காரணமாக மனுதாரருக்கு எவ்வித நிரந்தர ஊனமோ அல்லது உடல் குறைபாடோ ஏற்படவில்லை. எனவே, மேற்கூறிய காரணங்களின் அடிப்படையில், மனுதாரரின் மனுவை செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்து உத்தரவிடக்கோரி இந்த எதிருரையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

5) <u>மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சினைகள் யாதெனில்:</u>

(1) இவ்விபத்தானது யாருடைய கவனக்குறைவால் ஏற்பட்டது?

(2) மனுதாரருக்கு எதிர்மனுதாரர்கள் இழப்பீட்டுத் தொகை கொடுக்க கடமைப்பட்டுள்ளார்களா?

(3) மனுதாரருக்கு கிடைக்கக்கூடிய இழப்பீட்டு தொகை எவ்வளவு?

6) மனுதாரர் தரப்பில் ம.சா.1 விசாரிக்கப்பட்டு, ம.சா.ஆ.1 முதல் ம.சா.ஆ.13 ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. எதிர்மனுதாரர் தரப்பில் சாட்சிய, சான்றாவணங்கள் எதுவும் முன்னிலைப்படுத்தப்படவில்லை.

7) <u>பிரச்சினை எண் 1–ற்கான தீர்வு:–</u>

(1) இவ்விபத்தானது யாருடைய கவனக்குறைவால் ஏற்பட்டது? என்ற பிரச்சினைக்கு தீர்வு காண முற்படுகையில்,

(i) மேற்படி வழக்கை பரிசீலனை செய்கையில் விபத்தின் போது 11 வயதுடைய இளவர் மனுதாரர் கடந்த 30.06.2022 அன்று மாலை பள்ளி முடித்துவிட்டு வீட்டிற்கு திரும்பிய போது பூங்காவூர்

LATHA Digitally signed by LATHA Date: 2026.08.04 13:07:41 +0530

மெயின்ரோட்டில் அப்துல்ரத்தீப் என்பவரின் கூரை கொட்டகையின் எதிரே சாலையில் மழையின் காரணமாக இடது ஓரமாக நின்று கொண்டிருந்தபோது மாலை சுமார் 05.30 மணியளவில் மேற்கிலிருந்து கிழக்கு நோக்கி சென்ற PY 02 B 9939 என்ற பதிவெண் கொண்ட 1 ஆம் எதிர்மனுதாரருக்கு சொந்தமான தனியார் பேருந்தை அதன் ஒட்டுநரான 2 ஆம் எதிர்மனுதாரர் ஆரன் அடிக்காமலும், அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் ஓட்டி வந்து மனுதாரரின் மீது மோதி விபத்தை ஏற்படுத்தியதாக ம.சா.ஆ.1 முதல் தகவல் அறிக்கை 2 ஆம் எதிர்மனுதாரருக்கு எதிராக பதிவு செய்யப்பட்டுள்ளது.

(ii) மேலும், இளவர் மனுதாரருக்க ஏற்பட்ட காயத்திற்கு திருவாரூர் அரசு மருத்துவமைனையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டுள்ளார் என்பது ம.த.சா.ஆ.2 மற்றும் ம.த.சா.ஆ.3 இன் விபத்து பதிவேடு மற்றும் மருத்துவ குறிப்பேட்டில் இருந்து தெரியவருகிறது. அதில் நான்கு சக்கர வாகனம் மோதி கயாம் ஏற்பட்டதாக மருத்துவர் குறிப்பில் எழுதப்பட்டுள்ளது. இந்நிலையில், 3–ம் எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிருரையில் விபத்தே நடக்கவில்லை என மறுத்தும், அதே சமயம் குறுக்கு விசாரணையில் விபத்திற்கு 2 ஆம் எதிர்மனுதாரர் காரணம் இல்லை என எதிர் வாதத்தை முன் வைத்து மறுக்கப்பட்டுள்ளது. ஆனால், அதனை நிரூபிக்கும் வகையில் எதிர்மனுதாரர் தரப்பில் சாட்சிய சான்றாவணங்கள் இல்லை.

(iii) இந்நிலையில், மேற்படி முதல் தகவல் அறிக்கை மற்றும் விபத்து பதிவேடு ஆகியவற்றின் அடிப்படையில் இந்த விபத்திற்கு 1 ஆம் எதிர்மனுதாரருக்கு சொந்தமான வாகனத்தை ஓட்டி வந்த 2 ஆம் எதிர்மனுதாரரின் கவனக்குறைவே காரணம் என பிரச்சினை எண் 1–ற்கு இந்நீதிமன்றம் தீர்வு காண்கிறது.

LATHA Digitally signed by LATHA Date: 2026.08.04 13:07:48 +0530

8) <u>பிரச்சினை எண் 2–ற்கான தீர்வு:–</u>

(2) மனுதாரருக்கு எதிர்மனுதாரர்கள் இழப்பீட்டுத் தொகை கொடுக்க கடமைப்பட்டுள்ளார்களா?

மேற்கண்ட பரிசீலனையிலிருந்து, விபத்தானது 1 ஆம் எதிர்மனுதாரருக்கு சொந்தமான வாகனத்தை ஓட்டி வந்த 2 ஆம் எதிர்மனுதாரரின் கவனக்குறைவே காரணம் என தீர்வு காணப்பட்டுள்ளதால் 30.06.2022 ஆம் தேதி ஏற்பட்ட வாகன விபத்தில் தொடர்புடைய வாகனம் 1 ஆம் எதிர்மனுதாரருக்கு சொந்தமானது என்பது ம.த.சா.ஆ.8 இன் மூலம் தெரியவருகிறது. அந்த வாகனம் 3 ஆம் எதிர்மனுதாரர் நிறுவனத்தில் காப்பீடு செய்யப்பட்டு 17.03.2022 முதல் 16.03.2023 வரை காப்பீடு நிலுவையில் இருந்து வந்துள்ளது என்பது ம.சா.ஆ.10 எதிர்மனுதாரர் வாகனத்தின் காப்பீட்டு பாலிசி நகலில் குறிப்பிட்டுள்ளவகையில் நிரூபணமாகிறது.

(ii) மேலும், விபத்து சமயம் 2 ஆம் எதிர்மனுதாரருக்கு உரிய ஓட்டுநர் உரிமம் இருந்தது ம.சா.ஆ.9 மோட்டார் வாகன ஆய்வாளர் ஆய்வறிக்கையிலிருந்து தெரியவருகிறது. ஆகவே, 1–ம் எதிர்மனுதாரரின் வாகனம் 3–ம் எதிர்மனுதாரர் நிறுவனத்தில் காப்பீடு செய்யப்பட்டுள்ளதால் பகரபொறுப்பாளி என்ற வகையில் மனுதாரருக்கு இந்நீதிமன்றத்தால் நிர்ணயிக்கப்படும் இழப்பீட்டு தொகையை 3–ம் எதிர்மனுதாரர் கொடுக்க கடமைப்பட்டவர் என பிரச்சினை எண்.2–ற்கு இந்நீதிமன்றம் தீர்வு காண்கிறது.

9) <u>எழுவினா எண் 3–ற்கான தீர்வு:</u>

(3) மனுதாரருக்கு கிடைக்கக்கூடிய இழப்பீட்டுத் தொகை எவ்வளவு?

(i) விபத்தின் போது 11 வயதுடைய இளவர் மனுதாரர் பள்ளியில் படித்து வருவதாக மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

LATHA Digitally signed by LATHA Date: 2026.08.04 13:07:52 +0530

பள்ளிக்காலத்தின் போது எந்த வேலைக்கும் சென்று பொருள் ஈட்ட இயலாது. எனவே, இம்மனுதாரருக்கு வருமான இழப்பு எதுவும் இல்லை என இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

(ii) மேலும், அரசு மருத்துவமனையில் மனுதாரருக்கு கண்ணில் ஏற்பட்ட காயத்திற்காக சிகிச்சை அளிக்கப்பட்டுள்ளது என்பது தெரியவருகிறது. மனுதாரருக்கு விபத்தினால் எவ்வித ஊனத்தகுதி இழப்பு எதுவும் ஏற்படவில்லை என குறிப்பிட்டு அரசு மருத்துவக்குழுமத்தால் சான்று வழங்கப்பட்டபோதும், இளவர் மனுதாரருக்கு கண்ணில் ஏற்பட்ட காயத்தினால் அவருக்கு பார்வை இழப்பு ஏற்பட்டுள்ளதாக அவரது தாயார் அளித்த சாட்சியத்தின் அடிப்படையில் எதிர்கால படிப்பு மற்றும் வேலைவாய்ப்புகளை கருத்தில்கொண்டு இளவர் மனுதாரர் கீழ்கண்ட தலைப்புகளின் கீழ் இழப்பீடுகளை கணக்கிட இத்தீர்ப்பாயம் கருதுகிறது. ஆக, மனுதாரருக்கு கிடைக்கப்பெற வேண்டிய மொத்த இழப்பீட்டு தொகை என்ற வகையில்,

1)	**வலி, துன்பத்திற்கான இழப்பீடு**	**ரூ.**	**75,000.00**
2)	**ஊட்டச்சத்திற்காக**	**ரூ.**	**25,000.00**
3)	**ஆடை அணிகலன் மற்றும் இதர சேதாரத்திற்கு**	**ரூ.**	**1,000.00**
4)	**போக்குவரத்து செலவுக்காக**	**ரூ.**	**2,000.00**
5)	**எதிர்கால மருத்துவ செலவிற்காக**	**ரூ.**	**15,000.00**
	மொத்தம்	**ரூ.**	**1,18,000.00**

(iv) மேற்கண்டவாறு கணக்கிடப்பட்ட வகையில் ரூ.1,18,000.00/- மனுதாரர் பெற உரிமையுள்ளவர் என எழுவினா எண்.3 ற்கு இத்தீர்ப்பாயத்தால் தீர்வு காணப்படுகிறது.

(v) இம்மனுவில், எழுவினா எண்.2ல், மனுவில் குறிப்பிடப்பட்டுள்ள மனுதாரருக்கு 3-ம் எதிர்மனுதாரர் இழப்பீடு வழங்க கடமைப்பட்டுள்ளார் என்று தீர்வு காணப்பட்டிருக்கின்ற

LATHA Digitally signed by LATHA Date: 2026.08.04 13:07:58 +0530

காரணத்தினால், மேற்கண்ட தொகையான ரூ.1,18,000.00/-ஐ 3-ம் எதிர்மனுதாரர், மனுதாரருக்கு வழங்க கடமைப்பட்டுள்ளார் என்று இப்பிரச்சனைக்கு இத்தீர்ப்பாயம் முடிவு காண்கிறது

9) முடிவாக, இந்த மனு செலவுத்தொகையுடன் பகுதியாக அனுமதிக்கப்படுகிறது.

(1) மொத்த இழப்பீட்டுத் தொகையாக ரூ.1,18,000.00/- என நிர்ணயம் செய்யப்படுகிறது.

(2) மேற்படி இழப்பீட்டுத் தொகையை மனுதாரருக்கு, 3-ம் எதிர்மனுதாரர் இந்த மனு தாக்கலான தேதியிலிருந்து முழு தொகை வசூலாகும் வரைக்கும் 7.5% வட்டியுடன் (மனு தரப்பினரின் தள்ளுபடி செய்யப்பட்ட காலம் இருப்பின் அதை தவிர்த்து) செலவுத்தொகையுடன் இவ்வுத்தரவு பிறப்பிக்கப்பட்ட ஒரு மாத காலத்திற்குள் இத்தீர்ப்பாயத்தின் வங்கிக் கணக்கு எண்ணான ஸ்டேட் பேங்க ஆப் இந்தியா, விளமல் கிளை, திருவாரூர் கணக்கு எண்.CJMTVR442025NIIC, IFSC. SBIN0004266 - இ மாறுதல் மூலம் வைப்பீடு செய்து நீதிமன்ற Email ID. tvr.cjm-tn@indiancourts.nic.in என்ற மின்னஞ்சல் முகவரிக்கு தகவல் தெரிவிக்கவேண்டும் என்றும்

(3) அந்த தொகையினை 3-ம் எதிர்மனுதாரர் அவரது வங்கி கணக்கில் இருந்து இந்த நீதிமன்றத்தில் உள்ள வங்கி கணக்கில் செலுத்தி, அவ்வாறு செலுத்தியதற்கான வங்கிக்கு அனுப்பிய அறிவுறுத்தல் நகலை உடனடியாக தாக்கல் செய்ய வேண்டும் என்றும்,

(4) மேற்படி இழப்பீட்டு தொகை வைப்பீடு செய்யப்படும் பட்சத்தில், மனுதாரர் நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்து

LATHA Digitally signed by LATHA Date: 2026.08.04 13:08:02 +0530

பெற்றுக்கொள்ளலாம் என்றும்,

(5) மனுதாரர் மீதமுள்ள நீதிமன்ற கட்டணம் செலுத்த வேண்டியது இருந்தால் அதை இன்றிலிருந்து 10 நாட்களுக்குள் செலுத்த வேண்டுமென்றும், மீதி நீதிமன்ற கட்டணம் செலுத்தும் வரையில் தீர்ப்பாணை தொகையை மனுதாரர் பெறத்தக்கவரல்ல என்று உத்தரவிடப்படுகிறது.

(6) மனுதாரர் வழக்கறிஞர் கட்டணம் ரூ.5,360/- என நிர்ணயம் செய்தும் உத்தரவிடப்படுகிறது.

(மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற 11.05.2020 தேதியிட்ட முன்தீர்ப்பான Cholamandalam General Insurance company Ltd Vs Ayyannar and others Tr.C.M.P.No.s 264 to 281/2020 உத்தரவில் குறிப்பிட்டுள்ளப்படி தீர்ப்பாணை தொடர்பான அனைத்து விவரங்களும் இந்த உத்தரவிலேயே கொடுக்கப்பட்டு உள்ளடங்கி இருப்பதால் இந்த உத்தரவை தீர்ப்பாணையாகவும் கருதவேண்டுமென உத்தரவிடப்பட்டதன்பேரிலும் தனியானதொரு தீர்ப்பாணை தேவையில்லை என்பது சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.)

இத்தீர்ப்புரையானது 2026 ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 04-ஆம் நாள் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, அதை பிழைதிருத்தம் செய்து திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

LATHA Digitally signed by LATHA Date: 2026.08.04 13:08:08 +0530

மோ.வா.வி.கோ.தீர்ப்பாய நீதிபதி/
தலைமை நீதித்துறை நடுவர்
திருவாரூர்

I. **<u>மனுதாரர் தரப்பு சாட்சிகள்–</u>**

ம.சா.1	திருமதி. உமாராணி (இளவர் மனுதாரரின் தாயார்)

II. **<u>மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள் –</u>**

ம.சா.ஆ.1	01.07.2022 தேதியிட்ட முதல் தகவல் அறிக்கை நகல்
ம.சா.ஆ.2	30.06.2022 முதல் 02.07.2022 வரையிலான நன்னிலம் அரசு மருத்துவமனை மற்றும் திருவாரூர் அரசு மருத்துவமனை மருத்துவக்கல்லூரி சிகிச்சை பெற்றதற்கான மருத்துவக்குறிப்பு – அசல்
ம.சா.ஆ.3	30.06.2022 ஆம் தேதியிட்ட திருவாரூர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனை வழக்கிய விபத்து பதிவேடு – நகல்
ம.சா.ஆ.4	02.07.2022 ஆம் தேதி திருவாரூர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனை வழக்கிய மெடிக்கல் லீகல் ஒபீனியன் சான்று – பதிவிறக்க நகல்
ம.சா.ஆ.5	30.06.2022 ஆம் தேதியிட்ட திருவாரூர் மெடிக்கல் சென்டர் ஸ்கேன் ரிபோர்ட் – அசல்
ம.சா.ஆ.6	05.07.2022 ஆம் தேதியDr. K.B. நாகப்பன் கண் மருத்துவர் வழங்கிய மருத்துவ குறிப்பு – அசல்
ம.சா.ஆ.7	05.07.2022 முதல் 23.07.2022 வரை சன் மெடிக்கல் வழங்கிய ரசீது எண்ணிக்கை –2 அசல்
ம.சா.ஆ.8	விபத்து ஏற்படுத்திய வாகனத்தின் வாகன உரிமை சான்று – பதிவிறக்க நகல்
ம.சா.ஆ.9	விபத்தை ஏற்படுத்திய வாகனத்தின் ஆய்வாளர் அறிக்கை – நகல்
ம.சா.ஆ.10	விபத்தை ஏற்படுத்திய தனியார் பேருந்தின் வாகன காப்பீடு – நகல்
ம.சா.ஆ.11	மனுதாரரின் வங்கி கணக்கு புத்தகம் – அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்ட நகல்
ம.சா.ஆ.12	மனுதாரரின் மகளின் ஆதார் அட்டை –அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்ட நகல்
ம.சா.ஆ.13	மனுதாரரின் ஆதார் அட்டை – அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்ட நகல்

LATHA Digitally signed by LATHA Date: 2026.08.04 13:08:12 +0530

III. <u>நீதிமன்ற சான்றாவணங்கள்: – </u>இல்லை

IV. <u>எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள் –</u> இல்லை

LATHA Digitally signed by LATHA Date: 2026.08.04 13:08:17 +0530

மோ.வா.வி.கோ.தீர்ப்பாய நீதிபதி/
தலைமை நீதித்துறை நடுவர்,
திருவாரூர்.